/குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்/
எஸ்டிசி எண்.43/2020

வாசா 2 சண்முக சுந்தரம் த/பெ. அரங்கசாமி
தேதி 19-07-2021
பக்க எண். 1
வா.சா. 2 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

மனு எண். 528/2021 அனுமதிக்கப்பட்டு வாதி தரப்பில் கீழ்க்கண்டுள்ள 2 ஆவணங்கள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரரின் ஆவின் ஏஜென்சி எடுத்து நடத்திய ஆவணம் **வாசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார்தாரரின் வங்கி கணக்கு பட்டியல் 01-01-2017-முதல்01-01-2020 வரை **வாசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எதிரிக்கு நான் கொடுத்ததாக கூறப்படும் தொகையான ரூபாய். 7 லட்சத்தை நான் ரொக்கமாக கொடுத்தேன். என் கையிருப்பில் இருந்து பணம் கொடுத்தேன். வருடம் ரூபாய் 8 லட்சம் வருமானம் எனக்கு பலவித ஆதாரங்களில் இருந்து வருகிறது என்று நான் கூறுவது கடந்த 12 வருடங்களாக எனக்கு வருவதாகும். எனது வரவு செலவு கணக்குகள் பார்ப்பதற்கு நான் ஆடிட்டர் வைக்கவில்லை. சொந்தமாக நானும் பதிவேடுகள் எதுவும் பராமரிக்கவில்லை. நான் ஆவின் பால்பூத் ஏஜென்சி கடந்த 2 வருடங்களாக எடுத்து நடத்தி வருகிறேன். எதிரிக்கும் எனக்கும் நடந்ததாக கூறப்படும் வரவு செலவின்போது நான் ஆவின் ஏஜென்சி நடத்தவில்லை. எனக்கு பவர்லூம் மற்றும் வீடு வாடகைக்கு விட்டதன் மூலம் வருமானம் வந்தது. வீட்டை நான் வாடைக்கு விட்டது தொழிலுக்காகவா அல்லது குடியிருப்பிற்காகவா என்றால் இரண்டிற்குமேதான். நான் பவர்லூம் குத்தகைக்காக விட்டதற்கும் வீடுகளை வாடகைக்கு விட்டதற்கும் ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லை.வீட்டில் குடியிருக்கும் நபர்களின் விபரம் என்ன என்றால் ஒருவர் பெயர் சந்திரன் தாரமங்கலத்தை சார்ந்வர். இன்னொருவர் என் பெரியப்பா மகன் பூபதி. இரண்டு வீடுகளும் தனித்தனி வீடுகள். வீடுகளின் விபரம் என்ன என்றால் வாத்தியார் தோட்டம் 11 வது வார்டு. என் வீட்டிற்கு அருகிலேயே எனது வாடகை வீடுகள் உள்ளன. கதவு எண்கள் நினைவில்லை. வீட்டு வரி ரசீதை பார்த்தால்தான் கூறமுடியும். என் வாடகை வீட்டில் நடக்கும் விசைதறிகளுக்கு மின் இணைப்பு தொழிலுக்கான டாரிப் உள்ளது. 01-03-2018 ஆம் தேதி எதிரியின் அலுவலகத்திற்கு நான் சென்று காலை 11 மணி அளவில் பணம் கொடுத்தேன். பணம் எத்தனை ரூபாய் கட்டுக்கள் என்று நினைவில்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்தபோது நான் மட்டும் தான் இருந்தேன். வேறு சாட்சிகள் இல்லை. எதிரியின் கடை பாரம்பரியம் சில்க்ஸ் என்பது அழகாபுரத்தில் முருகன் கோவிலில் இருந்து இடதுபுறம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. எதிரியின் கடை எத்தனை அடுக்கு மாடிகள் கொண்டது என்றால் தரைதளத்தில் துணிகள் வைத்திருந்தார். பின்பு முதல் தளத்தில் அலுவலகம் உள்ளது என்று கூறி அழைத்து சென்று பணம் வாங்கிக் கொண்டார். எதிரியும் தனியாகத்தான் பணம் வாங்கிக்கொண்டார். வேறு யாரும் இல்லை.

வா.சா.2 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

நான் 12 வருடங்களாக வருமான வரி செலுத்தாததால் காசோலை மூலமாக பணம் கொடுக்காதது வருமான வரி சட்டத்தின்படி தவறானது என்றால் சரியல்ல. 01-04-2017-ஆம் ஆண்டு முதல் 2018 வரை உள்ள Fiscal Years-இல் எனது வங்கி கணக்கில் சொற்ப பணம்தான் உள்ளது என்றால் அப்போது நான் வங்கியில் பணம் வைக்கவில்லை. பின்பு வருமான வரி கட்டுவதற்காக 01-04-2018 முதல் வங்கி கணக்கில் பணம் வரவு வைத்துள்ளேன். கடந்த மூன்று வருடங்களாக என் வங்கி கணக்கில் பெரிய அளவில் நான் பணம் ஏதும் வரவு வைக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. 01-03-2018-தேதி அன்று எதிரி அவரது கடையில் இல்லை என்றாலும், மேற்படி தேதியில் அவர் மதுரையில் இருந்தார் என்றாலும், மேற்படி தேதியில் காலை 11 மணியளவில் நான் எதிரியை சந்தித்ததாக கூறுவது அப்பட்டமான பொய் என்றாலும்,சரியல்ல. வழக்கு காசோலையில் கண்டுள்ள பெயர் ஒரு மையிலும், பிற சங்கதிகள் வேறு ஒரு மையினாலும், நிரப்பப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் என்னால் நிரப்பப்பட்டுள்ள 7,00,000/-என்பதில் உள்ள 7 என்ற எண் 1 என்ற எண்ணை மாற்றி 7 என்பதாக நிரப்பப்பட்டுள்ளது என்றாலும், எனவே அது மெட்டீரியல் ஆல்ட்ரேசன் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையில் கண்டுள்ள தொகை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றாலும், காசோலையை எதிரி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நிக்சன் என்பரின் தூண்டுதலின்பேரில் இவ்வழக்கை நான் தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே எதிரிக்கு நான் கடன் கொடுத்திருந்தால் வேறு ஏதேனும் ஆதார ஆவணம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. வாசாஆ 3 இல் கண்டுள்ள எதிரியின் பழனியப்பா நகர், அஸ்தம்பட்டி என்ற விலாசத்திற்கும், நேரு வீதி மேடவாக்கம் சென்னை என்ற விலாசத்திற்கும் குறிப்பிட்டுள்ளபடி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாமல் வாசாஆ-4 பாரம்பரியம் சில்க்ஸ், 31/04, முருகன்கோவில் வீதி, பேர்லேண்ட்ஸ் என்ற முகவரிக்கு அனுப்பியுள்ளது மாற்றுமுறை ஆவண சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும், எனவே வழக்கு மூலம் எழவில்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.)

ஒம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.